# டீம் வியூவர் - ஒரு மாயாஜாலம்



உடன் பணியாற்றும் நண்பர் பொறியாளர் ஒருவருக்கு ஏற்பட்ட கஷ்டமான சூழ்நிலை இந்த கட்டுரையை எழுதத் தூண்டியது. ஒரு மதிப்பீடு அனுமதி தொடர்பாக சென்னையில் உள்ள தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு மதிப்பீடும் அது தொர்பான உட்கோட்ட வரைபடத்தையும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பிவிட்டார். பொறியாளர்கள் அனைவரும் மார்ச் மாத இக்கட்டில் உள்ளதால் நேரில் சென்று விளக்கவும் முடியாது. வேறு ஒரு மாவட்டத்தில் உள்ள சாலைகளை நாம் எளிதில் ஒரு வரைபடத்தை மட்டுமே வைத்து மதிப்பீட்டினை சரிபார்ப்பது என்பது சற்று கடினம் தான். அதற்கான விளக்கத்தை நண்பர் கைபேசி வாயிலாக பலமுறை விளக்கியும் எதிர் முனையில் உள்ளவரால் புரிந்துகொள்ள இயலவில்லை. இப்படி ஒரு கஷ்டமான சூழ்நிலையை பொருட்செலவின்றி நேர விரயமின்றி எளிதாக கையாள முடியுமா?

இதோ ஒரு தீர்வு – டீம் வியூவர்

கணிணி எந்த ஊரிலும் அல்லது எந்த நாட்டிலும் இருந்தாலும் நீங்கள் இருந்த இடத்தில் இருந்து இயக்க முடியும். டீம் வியூவர் மென்பொருளை தரவிறக்கம்(டவுன் லோட்) செய்து விட்டால் போதுமானது. அதில் படத்தில் காட்டியுள்ளவாறு ஐ.டி மற்றும் பாஸ்வோர்டு உங்கள் கணிணிக்கென்று ஒதுக்கப்பட்டுவிடும். இதில் ஐ.டி என்றும் மாறாது ஆனால் பாஸ்வோர்டு மட்டும் ஒவ்வொரு முறையும் டீம் வியூவர் ஆன் செய்யும் போதும் மாறிக்கொண்டே இருக்கும்.

படத்தில் இடது புறம் இருப்பது நமது ஐடி மற்றும் பாஸ்வோர்டு வலது புறம் இருப்பது நாம் தொடர்பு கொள்ள விரும்பும் கணிணியின் ஐடி. அந்த ஐடியை டைப் செய்து கனெக்ட் டு பார்ட்னர் க்ளிக் செய்தால் பாஸ்வோர்டு கேட்கும் அதையும் டைப் செய்துவிட்டால் இப்போது எதிர் முனையில் உள்ளவாரின் கணிணியை அவரின் அனுமதியுடன் நாம் இயக்கலாம். நாம் ஏதாவது ரகசிய கோப்புக்களை பார்க்க நேரிட்டால் எதிர்முனையில் உள்ளவர் அவரின் மவுஸின் உதவியுடன்

அதை தடுக்கலாம். எனவே ஒரு கணிணியை நாமும் வேறொரு இடத்தில் உள்ளவரும் ஒரே சமயத்தில் இயக்கலாம். இதன் துணைகொண்டு எளிதாக நாம் எதனைப் பற்றி வேண்டுமானாலும் விவாதிக்கலாம்.




மதிப்பீடுகளில் தவறுகளை திருத்தலாம். அனைத்து வகையான கோப்புகளைப் பற்றியும் விவாதிக்கலாம்(ஆட்டோ கேட் டிராயிங் உட்பட).

நம் அனுமதியின்றி நமது கணிணியை பயன்படுத்தி கோப்புகளை பார்த்து விடுவார்களோ என்று நண்பர்கள் பலரும் கேட்டார்கள். அதற்கு ஒரு சதவீதம் கூட வாய்ப்பில்லை நாம் பாஸ்வேர்டு சொல்லாம் நமது கணிணியை யாரும் பார்க்க இயலாது. எனவே இந்த முறையில் விவாதிப்பது மிகவும் நம்பிக்கையானது.

வீடியோ கான்பரன்சிங் மற்றும் டீம் வியூவர் இரண்டையும் இணைத்து கோப்புகளைப் பற்றி விவாதிப்பது நேரில் அமர்ந்து விவாதிப்பதற்கு இணையாக இருக்கும். இதில் யாருக்கும் எந்த வித மனஉளைச்சலும் பொருள் விரயமும் நேர விரயமும் ஏற்படாது.

மாயமா? மந்திரமா? நாம் நம் கணிணியின் மவுஸை தொடாமலே வெகுதூரத்தில் இருக்கும் ஒருவர் தன் கணிணியின் மவுஸை பயன்படுத்தி நம் கணிணியை தங்கு தடையின்றி இயக்குகிறார். நம் கண்முன்னே நமது கோப்புக்கள் திறக்கப்பட்டு மாறுதல்கள் செய்யப்படுகிறது நாமும் நினைத்தால் மாறுதல்களை நம் மவுஸைக் கொண்டு மேற்கொள்ளலாம். ஒரு கணிணியை இரண்டு இடங்களில் உள்ள மவுஸ்களைக் கொண்டு இயக்கலாம். இது சாத்தியமா? என்ற கேள்வி எழுகிறதா? தரவிறக்கம் செய்ய தேவைப்படும் நேரம் ஒரு நிமிடம் மட்டுமே. தரவிறக்கம் செய்து நீங்களும் அனுபவித்துப் பாருங்கள். ஒரு உதாரணம் பார்ப்போமா?

*நாகர்கோவிலில் இருந்து வந்த மதீப்பீடு மற்றும் அலெயிண்மென்ட் டிராயிங்கில் சென்னையில் உள்ள பொறியாளருக்கு சந்தேகம் தோன்றுகிறது. எப்படி கேட்பது வாய்மொழியில் கேட்டால் கேட்டவருக்கும் புரியாது பதில் அளிப்பவருக்கும் புரியாது. நேரே வந்தால் நேரம் பொருள் வீணாகும். இதோ டீம் வியூவரை ஆன் செய்கிறார்கள். சென்னையில் உள்ள பொறியாளர் நாகர்கோவிலில் உள்ள பொறியாளரிடம் ஐ.டி மற்றும் பாஸ்வேர்டை கூறிவிட்டார். இப்போது சென்னையில் உள்ள கணிணி இரு பொறியாளர்களும் அவரவர் இருப்பிடத்தில் இருந்தே இயக்க தயாராகிவிட்டது. சென்னையில் உள்ளவர் தனது மவுஸை பயன்படுத்தி கோப்பகள் மற்றும் வரைபடத்தில் தனக்கு ஏற்பட்ட சந்தேகித்த இடங்களை கோப்புக்களை திறந்து குறிப்பிடுகிறர். அதனை நாகர்கோவிலில் உள்ளவர் பார்த்துக்கொண்டு இருக்கிறார்.*

*பின்னர் நாகர்கோவிலில் உள்ளவர் இப்போது அவரது மவுஸை பயன்படுத்தி சந்தேகங்களை நிவர்த்தி செய்கிறார். இதனை சென்னையில் உள்ளவர் தன் இருப்பிடத்திலிருந்தே பார்த்து புரிந்து கொள்கிறார். இருவரும் நேரில் விவாதிப்பது போன்று அவரவர் கணிணியில் இருந்து கொண்டே கோப்புக்களை மிக துல்லியமாக விவாதித்து விட்டனர். இதனால் இரண்டு நாள் செய்ய வேண்டிய வேலை ஒரு சில மணிநேரத்தில் முடிந்து விடுகிறது. நாகர்கோவிலில் இருந்து சென்னை சென்று வர ஆகும் செலவு மற்றும் அந்த இரண்டு நாளும் நாகர்கோவில் பொறியாளரின் வேலைகளும் தடைபடவில்லை.*

இந்த உரையாடலுக்கான பொருட் செலவு கணக்கிட்டு பார்த்தால் மிக மிக குறைவு தான். அன்லிமிடெட் ஆன்லைன் கனெக்சன் மாதத்திற்கு ரூ.700 தான். அதை விட குறைவான பி.எஸ்.என்.எல். பிளான்கள் பல உள்ளன உங்களுக்கு தேவையானதை தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள்.

நம் பொறியாளர் நண்பர்கள் இதனைப் பயன்படுத்தி பணிகளை குறித்த நேரத்தில் செவ்வனே செய்து முடித்து நாட்டிற்கும் வீட்டிற்கும் நல்லவர்களாக திகழ்வோமாக!

என்றும் பொறியாளர்களின் நலன் விரும்பும்

பொறி.கா.மனுநீதி,

செயலாளர்,

த.நெ.பொ.ச.தேனி.